2023
திசெம்பர்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**2023 திசெம்பரில் 48.6 கொண்ட மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு கட்டடவாக்க கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண், கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் மெதுவான சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது.** கருத்திட்டப் பணிகள் கிடைக்கப்பெறுகின்றமை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை நடவடிக்கை அளவுகளை தொடர்ந்தும் தடைப்படுத்தியது என பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் புதிய கட்டளைகள் பரந்தளவில் ஒரே மாதிரியான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. தற்போது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மீதே தாம் மிதமிஞ்சியளவில் தங்கியிருப்பதாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, கருத்திட்ட நிறைவடைதலுக்கிசைவாக பணியாளர்களின் ஓய்வின் பிரதான காரணமாக தொழில்நிலை சுருக்கமடைந்தது. மேலும், முன்னெடுக்கப்படும் பணியும் வரவிருக்கும் கருத்திட்டங்களும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமையினால் கொள்வனவுகளின் அளவு மாத காலப்பகுதியில் சுருக்கமடைந்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் திசெம்பரில் நீட்சியடைந்து காணப்பட்டது.

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | **44.3** | **48.6** | + | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 45.7 | 45.8 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 35.7 | 40.3 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 42.9 | 47.2 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.4 | 51.4 | = | நீட்சியடைகின்றது, ஒத்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்வருகின்ற கருத்திட்டங்களில் குறைவு மற்றும் விலை மட்டங்கள் மீதான வரித்திருத்தங்களின் தாக்கம் என்பவற்றுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழிற்துறை பற்றிய எதிர்பார்க்கை எதிர்மறையான நோக்கில் காணப்படுகின்றது.

மொத்த நடவடிக்கைச் சுட்டெண் அளவு
2023 திசெம்பர்
**48.6**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொகுத்தல்: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்[1]*

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.

கொ.மு.சு =50; துறையானது நடுநிலையில் காணப்படுகிறது

கொ.மு.சு >50; துறையானது பொதுவாக விரிவடைகிறது

கொ.மு.சு <50; துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது

### *மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

**மொத்த நடவடிக்கை:** கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி ‘கட்டடவாக்க கொ.மு.சு’ ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**தொழில்நிலை:** நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

**கொள்வனவுகளின் அளவு:** உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்

**நிரம்பலர் விநியோக நேரம்:** கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

### *அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளை எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி கட்டடவாக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

[1] உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனத்தால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.